1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 83, செல்வி. கோ. மல்லிகா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

83 —

கிள்ளை பேரூராட்சி ரயிலடி குடியிருப்பு மக்களுக்கு மனைப் பட்டா வழங்குதல்.

*16484—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சி ரயிலடி அருகே குடியிருக்கும் மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சியில் ரயிலடி அருகாமையில் இருக்கிற கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு வேறு இடம் பார்த்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக் கிறது.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ லுகம்பட்டு கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த அரசு புறம் போக் கில், இங்கே குடியிருப்பவர்களை, இங்கே 23 குடும்பங்கள் இருக் கின்றன ; மாற்றி அமைப்பதற்கு ஏற்பாடு நடந்துகொண்டு வருகிறது.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஏற்றமிகு தலைவியாக விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் இந்த நிதி ஆண்டிலாவது பட்டா வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் ஆவன செய்யப்படும்